APPOLLO STUDY CENTRE

# நடப்பு நிகழ்வுகள் - ஜூலை, 01-31, 2025



| வ.எண். | தலைப்புகள் | பக்க எண். |
|---|---|---|
| 1 | தமிழ்நாடு | 3 |
| 2 | மாநிலங்கள் | 15 |
| 3 | தேசிய நிகழ்வுகள் | 16 |
| 4 | திட்டங்கள் | 19 |
| 5 | மாநாடுகளும் உச்சி மாநாடுகளும் | 24 |
| 6 | பாதுகாப்பு | 27 |
| 7 | பொருளாதாரம் | 31 |
| 8 | நியமனங்கள் | 34 |
| 9 | விருதுகள் | 35 |
| 10 | அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் | 38 |
| 11 | விளையாட்டுகள் | 42 |
| 12 | அறிக்கைகள் | 43 |
| 14 | முக்கிய தினங்கள் | 44 |

# தமிழ்நாடு

➢ **தமிழ்நாட்டில் நான்கு வழி நெடுஞ்சாலைத் திட்டம்**

✓ தமிழ்நாட்டின் பரமக்குடி - இராமநாதபுரம் சாலையை மேம்படுத்துவதற்காக ரூ.1,853 கோடி திட்டத்திற்கு ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது, உள்கட்டமைப்பு நவீனமயமாக்கலுக்கான ஒரு குறிப்பிடத்தக்க படியைக் குறிக்கிறது.



✓ கலப்பு வருடாந்திர பயன்முறை திட்டத்தின்கீழ் (Hybrid Annuity Mode) உருவாக்கப்பட்டுள்ள இந்தத் திட்டமானது, தேசிய நெடுஞ்சாலை 87-இன் 46.7 கிமீ பகுதியை நான்கு வழிச்சாலையாக மாற்றும்.

✓ இந்த முயற்சியானது, போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும், சுற்றுலாவை அதிகரிக்கும், சாலைப் பாதுகாப்பை மேம்படுத்தும் மற்றும் அதிகமான வேலைவாய்ப்பு நாட்களை உருவாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

➢ **தமிழ்நாடு அறிவு வளாகம் (Tamil Knowledge Campus)**

✓ சென்னை தரமணியில் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தை ரூ.40 கோடி செலவில் அமைக்கும் தமிழ் அறிவு வளாகத்தைக் கட்டுவதற்கான அடிக்கல்லை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வியாழக்கிழமை (ஜூலை 3, 2025) காணொலி காட்சி மூலம் தொடங்கி வைத்தார்.



✓ சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அருகே உள்ள கோட்டையூரைச் சேர்ந்த மறைந்த கலைஞர் ரோஜா முத்தையாவின் நினைவாக பெயரிடப்பட்ட நூலகத்தின் அடித்தளமாக, கிட்டத்தட்ட 50,000 புத்தகங்களின் தொகுப்பு, பருவ இதழ்கள், எபிமெராக்கள் (குறுகியகால பயன்பாட்டுப் பொருட்கள்) மற்றும் துண்டுப்பிரசுரங்கள் போன்றவை அமைந்துள்ளன.

➢ **பிரதமரின் மித்ரா திட்டத்தின்கீழ் விருதுநகர் உலகளாவிய ஜவுளி மையமாக மாறவுள்ளது**

✓ தமிழ்நாட்டின் விருதுநகரில் உள்ள பிரதமர் மித்ரா (PM MITRA) ஜவுளிப்பூங்கா, இந்தியாவின் ஜவுளி வளர்ச்சி உற்பத்தியின்கீழ் ஒரு மைல்கல் முயற்சியாகும்.




- ✓ ஒன்றிய அரசின் ரூ.1,900 கோடி முதலீட்டிலான இந்த 1,052 ஏக்கர் மையமானது, ZLD கழிவுநீர் சுத்திகரிப்பு, தொழிலாளர் தங்குமிடங்கள் மற்றும் தொழில்துறை பணியிடங்கள் உள்ளிட்ட மேம்பட்ட உள்கட்டமைப்பை வழங்கும்.
- ✓ 2026ஆம் ஆண்டுக்குள் ரூ.10,000 கோடி தனியார் முதலீடுகளை ஈர்க்கும் மற்றும் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புகளை உருவாக்கும் என எதிர்பார்க்கப்படும் இந்தப் பூங்காவானது, இப்பகுதியில் ஏற்றுமதி சார்ந்த மற்றும் நிலையான ஜவுளி உற்பத்தியை கணிசமான அளவு மேம்படுத்தும்.

## ➢ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் 'கோயம்புத்தூர் மாஸ்டர் பிளான் 2041'-ஐ தொடங்கி வைத்தார்

- ✓ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், வெள்ளிக்கிழமை (ஜூலை 4, 2025) அன்று சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து, 1,531 ச.கி.மீ பரப்பளவில் பரந்து விரிந்துள்ள கோயம்புத்தூர் உள்ளூர் திட்டமிடல் பகுதிக்காக தயாரிக்கப்பட்ட புவியியல் தகவல் அமைப்பு அடிப்படையிலான திட்டமான, 'கோயம்புத்தூர் மாஸ்டர் பிளான் 2041'-ஐ வெளியிட்டார்.




- ✓ கோயம்புத்தூர் உள்ளூர் திட்டமிடல் பகுதியில் ஒரு நகராட்சி, நான்கு நகராட்சிகள், 21 பேரூராட்சிகள் மற்றும் 66 வருவாய் கிராமங்கள் உள்ளன.
- ✓ இந்த ஆவணம் நகர மற்றும் கிராமப்புற திட்டமிடல் இயக்குநரகத்தால் தயாரிக்கப்பட்டுள்ளது.

## ➢ உங்களுடன் ஸ்டாலின் திட்டம்

- ✓ கடலூர் மாவட்டம் சிதம்பரம் நகராட்சியில், பொதுமக்களின் குறைகளை நேரடியாக நிவர்த்தி செய்து, மக்களின் வீட்டு வாசலிலேயே சிறப்பு முகாம்கள் மூலம் அரசு சேவைகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்ட, 'உங்களுடன் ஸ்டாலின்' முயற்சியின் முதல் முகாமை ஜூலை 15ஆம் தேதி தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.




- ✓ இந்தத் திட்டத்தின்கீழ், ஜூலை 15 முதல் நவம்பர் வரை, அனைத்து மாவட்டங்களிலும் கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் மொத்தம் 10,000 சிறப்பு முகாம்கள் ஏற்பாடு செய்யப்படும்.

## ➢ தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் மஞ்சப்பை பிரச்சாரத்தை ஊக்குவிப்பதற்காக செல்வாக்கு மிக்கவர்களைப் பயன்படுத்த உள்ளது

- ✓ மீண்டும் மஞ்சப்பை பிரச்சாரத்தை அனைவருக்கும் மற்றும் இளையவர்களிடம் கொண்டு செல்லும் முயற்சியாக, தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம், பிளாஸ்டிக்குக்கு மாற்றாக சுற்றுச்சூழலுக்கு உகந்த மாற்றுப் பொருட்களை ஊக்குவிப்பதற்காக சமூக ஊடக உள்ளடக்க படைப்பாளர்களுடன் இணைந்து செயல்பட உள்ளது.




- ✓ 2021ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்தப் பிரச்சாரம், மாநிலத்தில் ஒருமுறை மட்டுமே பயன்படுத்தக்கூடிய பிளாஸ்டிக் பைகளின் உற்பத்தி மற்றும் நுகர்வைக் குறைப்பதற்காக, துணிப்பைகள் மற்றும் மாற்றுகளைப் பயன்படுத்துவதை ஊக்குவிக்கிறது.

## ➢ சமூக நீதி விடுதிகள்

- ✓ தமிழக அரசின் பல்வேறு துறைகளால் சமூகத்தின் ஏழை மற்றும் ஒதுக்கப்பட்ட பிரிவுகளைச் சேர்ந்த பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களின் நலனுக்காக நடத்தப்படும் அனைத்து விடுதிகளும் இனிமேல் 'சமூக நீதி விடுதிகள்'' என்று அழைக்கப்படும் என்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் திங்கட்கிழமை (ஜூலை 7, 2025) அன்று அறிவித்தார்.




- ✓ மொத்தம் 2,739 விடுதிகள் மாநில அரசின் பல்வேறு துறைகளால் நடத்தப்படுகின்றன. இதனால் 1.79 இலட்சம் மாணவர்கள் பயனடைகின்றனர்.
- ✓ ஓய்வுபெற்ற சென்னை உயர்நிதிமன்ற நீதிபதி, நீதியரசர் கே. சந்துரு தலைமையிலான குழுவின் பரிந்துரைகளைத் தொடர்ந்து அரசு நடத்தும் விடுதிகளின் பெயரை மாற்றும் முடிவு எடுக்கப்பட்டது..

➢ **காசநோய் இறப்புக்கான முன்கணிப்பு மாதிரியை தமிழ்நாடு அறிமுகப்படுத்த உள்ளது**

- ✓ காசநோய் கண்டறியப்பட்ட பெரியவர்களிடையே இறப்பு அபாயத்தை மதிப்பிடுவதற்கு ஒரு முன்கணிப்பு மாதிரியைப் பயன்படுத்தும் இந்தியாவின் முதல் மாநிலமாக தமிழ்நாடு மாறியுள்ளது.




- ✓ இந்த மாதிரியானது மாநிலத்தின் தற்போதைய TB SeWA செயலியுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.
- ✓ தமிழ்நாட்டின் TB SeWA (கடுமையான காசநோய் வலை செயலி) 2022 முதல் தமிழ்நாடு காசநோய் இறப்பில்லா திட்டத்தின்கீழ் செயல்பட்டு வருகிறது.
- ✓ TN-KET முயற்சியானது, காசநோய் பராமரிப்பு அடுக்கில், இழப்புகளைக் குறைத்துள்ளது. மேலும, பல மாவட்டங்களில் காசநோய் இறப்பு விகிதங்களைக் குறைக்க உதவியுள்ளது.

➢ **சிவகாசி-கோவில்பட்டி தீப்பெட்டிகளுக்கு புவிசார் குறியீடு கோரப்பட்டுள்ளது**

- ✓ கோவில்பட்டி தேசிய சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் சங்கம், சிவகாசி-கோவில்பட்டி தீப்பெட்டிகளுக்கு புவிசார் குறியீடு வழங்கக்கோரி விண்ணப்பம் அளித்துள்ளது.



- ✓ அளிக்கப்பட்டுள்ள கோரிக்கை மனுவின்படி, சிவகாசி தீப்பெட்டி என்ற சொல் 100 ஆண்டுகளுக்கும் மேலாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், பதப்படுத்துதல், தயாரித்தல் மற்றும் உற்பத்தி ஆகியவை சிவகாசி வட்டத்தில் நடைபெறுகிறது. இது சாத்தூர் மற்றும் விருதுநகர் வட்டங்கள் (விருதுநகர் மாவட்டம்), கோவில்பட்டி மற்றும் எட்டையபுரம் வட்டங்கள் (தூத்துக்குடி மாவட்டம்) மற்றும் சங்கரன்கோவில் வட்டம் (தென்காசி மாவட்டம்) வரை பரவியுள்ளது.

## ➢ தமிழ்நாட்டின் செஞ்சிக்கோட்டை யுனெஸ்கோவின் உலக பாரம்பரிய தளமாக பட்டியலிடப்பட்டுள்ளது

- ✓ விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள செஞ்சிக்கோட்டை 'கிழக்கின் ட்ராய்' (Troy of the East) என்று அழைக்கப்படுகிறது. மராட்டிய இராணுவ நிலப்பரப்புகளை உருவாக்கும் 11 பிற கோட்டைகளுடன், ஜூலை 11, 2025 வெள்ளிக்கிழமை அன்று யுனெஸ்கோவின் உலக பாரம்பரிய தளமாக அறிவிக்கப்பட்டது. இது உலகளாவிய அங்கீகாரத்தையும், சர்வதேச சுற்றுலாவை அதிகரிக்கும் வாய்ப்பையும் கொண்டு வரும் ஒரு நடவடிக்கையாகும்.



- ✓ பாரிசில் நடைபெற்று வரும் உலக பாரம்பரியக் குழுவின் (World Heritage Committee) 47வது அமர்வின்போது இந்த முடிவு எடுக்கப்பட்டது.
- ✓ உலக பாரம்பரிய தளக் குறியீட்டைப் பெறுவதற்கு தமிழ்நாட்டிலிருந்து விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த செஞ்சிக்கோட்டை மட்டுமே விண்ணப்பித்தது.

## ➢ கீழடி அகழ்வாராய்ச்சி - மூன்றாம் கட்ட அறிக்கை

- ✓ சிவகங்கை மாவட்டம் கீழடியில் மூன்றாம் கட்ட அகழ்வாராய்ச்சிக்கு தலைமை தாங்கிய தொல்பொருள் ஆய்வாளர் பி.எஸ். ஸ்ரீராமனுக்கு, தனது மேற்பார்வையின்கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகள் குறித்த விரிவான அறிக்கையைத் தயாரிக்க இந்திய தொல்பொருள் ஆய்வு மையம் அனுமதி அளித்துள்ளது.



- ✓ இந்திய தொல்பொருள் துறையின் அதிகாரப்பூர்வ வட்டாரங்களின்படி, 2019இல் ஓய்வுபெற்ற திரு. ஸ்ரீராமனுக்கு, கீழடியில் நடைபெற்ற மூன்றாம் கட்ட அகழ்வாராய்ச்சி மற்றும் அவர் தலைமை தாங்கிய ஈரோடு மாவட்டம் கொடுமணல் ஒரு பருவ அகழ்வாராய்ச்சி ஆகியவை குறித்த அறிக்கைகளைத் தயாரிக்க இந்த நிறுவனம் அனுமதி வழங்கியுள்ளது.

➢ **நடுநிலைப் பள்ளிகளில் முன்னோடி அடிப்படையில் யு-வடிவ இருக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படும்**

- ✓ ஸ்தானார்த்தி ஸ்ரீ குட்டன் (Sthanarthi Sree kuttan) திரைப்படத்தால் ஈர்க்கப்பட்டு கேரளாவின் ஒரு புதிய முயற்சியை மையமாகக் கொண்டு, சனிக்கிழமை தமிழக அரசு, மாநிலத்தில் உள்ள அனைத்து நடுநிலைப் பள்ளிகளையும் பரம்பரிய வரிசை அடிப்படையிலான இருக்கைகளிலிருந்து U-வடிவ ஏற்பாட்டிற்கு மாறுமாறு உத்தரவிட்டது.



- ✓ இருப்பினும், திட்டத்தில் சில மாற்றங்கள் குறித்த விவாதங்களுக்குப் பிறகு புதிய இருக்கை அமைப்பு ஏற்பாடு செயல்படுத்தப்படும் என்று பள்ளிக்கல்வித்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.
- ✓ இத்துறை, தொடக்கப்பள்ளி வகுப்பறைகளில் வட்ட இருக்கை சீரமைப்பை ஏற்கனவே செயல்படுத்தி வருகிறது.

➢ **தூய்மை இந்தியா (Swachh Survekshan) கணக்கெடுப்பில் 95 'பெரிய நகரங்களில்', திருச்சி 49வது இடத்தில் உள்ளது.**

- ✓ தேசிய அளவிலான தூய்மை இந்தியா கணக்கெடுப்பு 2024-25இல், 3 இலட்சம் முதல் 10 இலட்சம் வரை மக்கள் தொகை கொண்ட 95 நகரங்களில் திருச்சி மாநகராட்சி 49வது இடத்தைப் பிடித்துள்ளது.



SWACHH SURVEKSHAN 2024-25

| TN Cities | Marks | National rank | Category |
|---|---|---|---|
| Coimbatore | 8,347 | 28 | 10 lakh+ |
| Trichy | 8,239 | 49 | 3-10 lakh |
| Chennai | 6,822 | 38 | 10 lakh+ |
| Madurai | 4,823 | 40 | 10 lakh+ |

- ✓ வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகம் வெளியிட்டுள்ள தரவுகளின்படி, 12,500 மதிப்பெண்களில், திருச்சி 8,239 மதிப்பெண்களைப் பெற்று 'பெரிய நகரங்கள்' பிரிவில் (3 முதல் 10 இலட்சம் வரை மக்கள் தொகை கொண்ட நகரங்கள்) 49வது இடத்தைப் பிடித்துள்ளது.
- ✓ இந்தப் பிரிவில் திருச்சி மாநகரம் மாநில அளவில் முதலிடத்தைப் பிடித்துள்ளது. ஒட்டுமொத்த மாநில தரவரிசையில் ஒன்பதாவது இடத்தைப் பெற்றுத் தந்துள்ளது.

## ➢ தமிழ்நாடு தினத்தன்று, ஸ்டாலினும், உதயநிதியும் அண்ணாதுரையின் சாதனைகளை நினைவுகூர்ந்தனர்

- ✓ தமிழ்நாடு தினத்தை முன்னிட்டு, முதலமைச்சர் மு.க. ஸ்டாலினும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினும் வெள்ளிக்கிழமை அன்று, மாநிலத்தின் வளமான பாரம்பரியத்தையும் கலாச்சாரத்தையும் எடுத்துரைத்தனர். மேலும், முன்னாள் முதலமைச்சர் சி.என். அண்ணாதுரையின் சாதனைகளையும் நினைவுகூர்ந்தனர்.




- ✓ ஜூலை 18, 1967 அன்றுதான் இந்த மாநிலம் அதன் உண்மையான பெயராகிய 'தமிழ்நாடு'ஐ பெற்றது என்று திரு. ஸ்டாலின் கூறினார். மேலும் மறைந்த திரு. அண்ணாதுரை, சட்டமன்றத்தில் மேசைத் தட்டலின் கரவொலிகளுக்கு இடையே 'தமிழ்நாடு' என்ற பெயரை மூன்று முறை உச்சரித்ததை நினைவுகூர்ந்தார்.

## ➢ நான்கு செப்புத் தகடு கல்வெட்டுகள் - மன்னர் ராஜேந்திர சோழனின் செயல்களை பறைசாற்றுகின்றன

- ✓ ராஜ ராஜ சோழனின் புகழ்பெற்ற மகனான முதலாம் ராஜேந்திர சோழன், இந்திய துணைக் கண்டத்திற்கு அப்பால் சோழப் பேரரசின் எல்லைகளை விரிவுபடுத்தினார்.



- ✓ தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியா முழுவதும் இராணுவ வெற்றிகளைப் பெற்றது மட்டுமில்லாமல், தாராளமான நில மானியங்கள் மற்றும் கோவில் ஆதரவும் அவரது ஆட்சியைக் குறிக்கின்றன (கி.ப. 1012-1044).

✓ ராஜேந்திர சோழனின் காலத்தின் மிகவும் மதிப்புமிக்க பதிவுகளில், தமிழகம் முழுவதும் வெவ்வேறு இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட நான்கு செப்புத் தகடு கல்வெட்டுகள் உள்ளன.
✓ இந்தக் கல்வெட்டுகள் சோழ வம்சாவளி, கோயில் கொடைகள் மற்றும் இராணுவப் பயணங்களை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன.

➢ **தொலைந்துபோன காலக்கெடுவை வெளிக்கொணர்தல்: மருங்கூர் அத்தியாயம்**
✓ சென்னை-கும்பகோணம் நெடுஞ்சாலையில் இருந்து கொல்லுக்காரன் கிராமத்திற்கு அருகில் 2 கிமீ தூரம் மாற்றுப்பாதையில் சென்றால் இந்த இடத்திற்குச் செல்லலாம். இங்கு தமிழ்நாடு தொல்பொருள் துறை சமீபத்தில் அகழ்வாராய்ச்சியை முடித்தது. நீண்ட காலமாக மறக்கப்பட்ட கடந்த காலத்தின் சான்றுகளையும், தமிழ்நாட்டின் வளமான பாரம்பரியத்தின் மேலும் சான்றுகளையும் இது வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தது.



✓ இந்தப் பகுதி பண்டைய நடுவில் மண்டலம் அல்லது நடுவில் நாட்டின் (மத்திய பிராந்தியப் பிரிவு) ஒரு பகுதியாக இருந்தது. இது வடக்கே தென்பெண்ணை மற்றும் தெற்கே வடவெள்ளார் நதியால் சூழப்பட்டிருந்தது.
✓ 2024-25ஆம் ஆண்டில் TNSDA அகழ்வாராய்ச்சியை மேற்கொண்ட எட்டு இடங்களில் மருங்கூர் ஒன்றாகும்.

➢ **இ-சாக்ஷயா (e-Sakshaya)**
✓ காவல் துறையினர் ஆடியோ-விஷுவல் ஆதாரங்களைச் சேகரிக்கவும், குற்றச் சம்பவங்கள் அல்லது சாட்சிகளின் புகைப்படங்களைப் பதிவேற்றவும், மாறாத எஸ்ஜடி பாக்கெட்டுகளை (பாதுகாப்பான, புவி-குறியிடப்பட்ட, ஹாஷ் சரிபார்ப்புடன் நேர முத்திரையிடப்பட்ட ஆதாரங்கள்) உருவாக்கவும், இசாக்ஷயா என்ற புதிய கைப்பேசி செயலி வெளியிடப்பட உள்ளது.
✓ இது காவல் சங்கிலியை வலுப்படுத்தும் மற்றும் சாட்சியங்களை ஏற்றுக் கொள்ளும் தன்மையை வலுப்படுத்தும் என்று ஒரு மூத்த காவல்துறை அதிகாரி தெரிவித்தார்.
✓ ஆடியோ மற்றும் வீடியோ ஆதாரங்களைப் பதிவு செய்து, நேர முத்திரையுடன் ஹாஷ் அறிக்கைகளை உருவாக்குவதற்காக ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சகத்தால் இந்தச் செயலி உருவாக்கப்பட்டுள்ளது.

➢ **கல்வெட்டுகள் குறித்த தேசிய மாநாடு (National Conference on Inscriptions, Epigraphy)**



✓ தமிழ்நாட்டில் கல்வெட்டுகள் குறித்த தேசிய மாநாடு விரைவில் நடத்தப்பட உள்ளது என்று தமிழக நிதியமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்தார்.

✓ மதுரையில், ஞாயிற்றுக்கிழமை (ஜூலை 20, 2025) தொல்பொருள் சங்கம் நடத்திய நிகழ்வின்போது கல்வெட்டு அறிஞர் எஸ். ராஜகோபால் பற்றிய 'திசையாயிரம்' என்ற புத்தகத்தை வெளியிட்ட திரு. தென்னரசு, சட்டமன்றத்தில் பல விவாதங்களைத் தொடர்ந்து, அகழ்வாராய்ச்சிக்காக ஒதுக்கப்பட்ட நிதி ரூ.5 கோடியிலிருந்து ரூ.7 கோடியாக உயர்த்தப்பட்டதாகக் கூறினார். .

➢ **ஆனைமலை புலிகள் காப்பகத்தில் இருவாச்சி (Hornbill) பாதுகாப்பு மையம்**

✓ கோயம்புத்தூர் மாவட்டத்தின் ஆனைமலை புலிகள் காப்பகத்தில் இந்தியாவின் இருவாச்சி பாதுகாப்பு சிறப்பு மையத்தை நிறுவுவதாக தமிழ்நாடு அரசு அறிவித்தது.




✓ 'காட்டு விவசாயிகள்' என்று அழைக்கப்படும் இந்த இருவாச்சிகள், விதைகளைப் பரப்புபவர்களாக ஒரு முக்கிய சுற்றுச் சூழல் பங்கை வகிக்கின்றன, பூர்வீக காடுகளை மீண்டும் உருவாக்க உதவுகின்றன என்று அதிகாரப்பூர்வ வெளியீடு தெரிவித்துள்ளது.

✓ இந்த மையத்தை நிறுவுவதற்காக சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையானது, அழிந்து வரும் உயிரின பாதுகாப்பு நிதியத்தின்கீழ் ரூபாய் ஒரு கோடியை அனுமதித்துள்ளது.

➢ **தமிழ்நாடு மொழி அட்லஸ்: 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, மாநிலத்தில் 96 மொழிகள் பேசப்படுகின்றன**

✓ தமிழ்மொழி பிராந்திய அடையாளத்தின் வலுவான அடையாளமாக இருந்தபோதிலும், தமிழ்நாட்டின் மொழியியல் சுயவிவரம் தெலுங்கு, கன்னடம், உருது, மலையாளம் மற்றும் ஆங்கிலம் உள்ளிட்ட பல்வேறு மொழிகளை வெளிப்படுத்துகிறது. இது மாநிலத்தின் வளமான மொழியியல் பன்முகத்தன்மையை பிரதிபலிப்பதாக உள்ளது.



- ✓ மொழி அட்லசின்படி, மாநிலத்தின் மொத்த மக்கள் தொகை 7,21,47,030 ஆகும்.
- ✓ இதில், 7,20,98,315 பேர் (99.93 விழுக்காடு) இந்திய அரசியலமைப்பின் எட்டாவது அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ள 22 மொழிகளில் ஒன்றைப் பேசுவதாகவும், 48,715 பேர் (0.07 விழுக்காடு) மட்டுமே பிற மொழிகளைப் பேசுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- ✓ 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்போது, தமிழ்நாட்டின் நிர்வாக எல்லைக்குள் மொத்தம் 96 மொழிகள் அடையாளம் காணப்பட்டன.

➢ **காஞ்சிபுரம் இட்லிக்கு புவிசார் குறியீடு கோரப்பட்டுள்ளது**



- ✓ தமிழ்நாடு உணவு பதப்படுத்துதல் மற்றும் வேளாண் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகம் (The Tamil Nadu Food Processing and Agri Export Promotion Corporation) கோவில் இட்லி அல்லது காஞ்சிபுரம் இட்லி என்ற இட்லிக்கு புவிசார் குறியீடு கோரி விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளது. இது பெரும்பாலும் பட்டுச்சேலைகளுக்குப் பெயர் பெற்ற காஞ்சிபுரம் நகரத்தில் உள்ள ஸ்ரீவரதராஜ பெருமாள் கோவிலில் வழங்கப்படும் பிரசாதங்களில் ஒன்றாகும்.
- ✓ இந்த விண்ணப்பத்தை நபார்டு மற்றும் தமிழ்நாடு வேளர்மைப் பல்கலைக்கழகத்தின் முன் முயற்சியான மதுரை வேளாண் வணிக காப்பீட்டு மன்றம் எளிதாக்கியது.

➢ **ராஜேந்திர சோழனின் கடற்படை பயணத்தின் ஆயிரமாண்டு நினைவு நாணயம்**

- ✓ பிரதமர் நரேந்திர மோடி ஞாயிற்றுக்கிழமை (ஜூலை 27, 2025) அன்று கங்கைகொண்ட சோழபுரத்தில், 'முதலாம் ராஜேந்திர சோழ மன்னனின் கடற்படைப் பயணத்தின் 1000வது ஆண்டு நிறைவை' குறிக்கும் வகையில் ஆயிரம் ரூபாய் நாணயத்தை வெளியிட்டார்.




- ✓ இந்த நாணயத்தை வெளியிடுவதற்கான கோரிக்கையை கங்கைகொண்ட சோழபுரம் மேம்பாட்டு கவுன்சில் அறக்கட்டளையின் தலைவர் ஆர். கோமகன் விடுத்திருந்தார்.
- ✓ அவர் ஒரு நாணயத்தை வடிவமைத்து ஒன்றிய அரசுக்கு அனுப்பியிருந்தார்.
- ✓ அவரது முன்மொழிவு ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதைத் தொடர்ந்து நாணயமும் வெளியிடப்பட்டது.
- ✓ அதில் குதிரையில் சவாரி செய்யும் பேரரசரின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. பின்னணியில் கப்பல் உள்ளது.

➢ **தமிழ்நாட்டில் நெல் கொள்முதல்: சாதனை படைக்க உள்ளது**

- ✓ தமிழ்நாடு நெல் கொள்முதலில் சாதனை படைக்க உள்ளது. ஏனெனில் இது விரைவில் 45 இலட்சம் டன் என்ற புதிய இலக்கைத் தொட உள்ளது.



- ✓ இன்றைய நிலவரப்படி, 2020-21ஆம் ஆண்டில் கொள்முதல் சாதனை 44.95 இலட்சம் டன்னாக இருந்தது. மாநில அரசு விவசாயிகளிடமிருந்து தினமும் சராசரியாக சுமார் 15,000 டன் கொள்முதல் செய்து வருவதால், தற்போதைய உச்சம் சில நாட்களிலேயே எடடப்பட்டு விடும்.
- ✓ நடப்பு கொள்முதல் ஆண்டு முடிவடைய சுமார் ஒரு மாதம் உள்ள நிலையில், ஒட்டு மொத்த கொள்முதல் எண்ணிக்கை இறுதியில் 47 இலட்சம் டன்னாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

➢ **தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் கூகுள் பிளே (Google Play) – உடன் ஒரு புரிந்துணர்வை ஒப்பந்தத்தைச் செய்துள்ளது.**

- ✓ 'நான் முதல்வன்' திட்டத்தின்கீழ், கணினி அறிவியல் மாணவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மற்றும் கூகுள் பிளே மற்றும் யூனிட்டி இடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.




- ✓ துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலையில் ‘கூகுள் பிளே மற்றும் யூனிட்டி கேம் டெவலப்பர் பயிற்சி திட்டம்’ குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.
- ✓ இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்கீழ், இறுதியாண்டு மாணவர்கள் விளையாட்டு உருவாக்குநர்கள், கலைஞர்கள் மற்றும் நிரலாளர்களாப் பயிற்சி பெறுவார்கள்.

➢ **நலம் காக்கும் ஸ்டாலின்**

- ✓ ‘நலம் காக்கும் ஸ்டாலின்’ திட்டத்தின்கீழ் ஏற்பாடு செய்யப்படும் முகாம்களில் பொதுமக்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்க வேண்டுமென்று தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வியாழக்கிழமை அன்று வேண்டுகோள் விடுத்தார்.




- ✓ ஆகஸ்ட் 2ஆம் தேதி சென்னையில் தொடங்கப்பட்ட இந்தத் திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டின் 38 மாவட்டங்களிலும் மொத்தம் 1,256 முகம்கள் ஏற்பாடு செய்யப்பட உள்ளன.
- ✓ இந்த முகாம்கள் மக்களுக்கு பல்வேறு மருத்துவ சேவைகளை வழங்கும்.

# மாநிலங்கள்

➢ **அசாமில் இந்தியாவின் முதல் நீர் தொழில்நுட்ப பூங்கா**

✓ அசாம் மாநிலம் கௌஹாத்தி அருகே சோனாப்பூரில் இந்தியாவின் முதல் நீர் தொழில்நுட்பப் பூங்காவை முதலமைச்சர் ஹிமந்தா பிஸ்வா சர்மா திறந்து வைத்தார்.




✓ இந்தப் பூங்கா மீன் வளர்ப்போர் அக்வாபோனிக்ஸ், பயோப்ளாக் மற்றும் அலங்கார மீன் இனப்பெருக்கம் போன்ற புதிய தொழில்நுட்பங்களை அறிந்துகொள்ள உதவும்.

✓ இந்த முயற்சியானது, மாநிலத்தில் மீன் உற்பத்தியை அதிகரிப்பதையும், மீனவர்களின் வருமானத்தை அதிகரிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ குறைந்த நீர், வேகமான முறைகள் மற்றும் புதிய அமைப்புகளைப் பயன்படுத்தி மீன் வளர்ப்பதற்கான நவீன வழிகளை இது காட்டுகிறது.

# தேசிய நிகழ்வுகள்

➢ **இந்தியாவின் ஆட்டோமோடிவ் மிஷன் திட்டம் 2047**

✓ 2047ஆம் ஆண்டுக்குள் இந்தியாவை உலகளாவிய வாகனத் தலைவராக மாற்றுவதற்காக இந்திய அரசு ஆட்டோமோடிவ் மிஷன் திட்டம் 2047ஐ அறிமுகப்படுத்தியுள்ளது.




✓ இந்த மூலோபாய வரைபடம், பரந்த ‘விக்சித் பாரத்@2047’ தொலைநோக்குப் பார்வையுடன் ஒத்துப்போகிறது.

✓ இந்தத் திட்டம் புதுமை, நிலைத்தன்மை மற்றும் அதிகரித்த உலகளாவிய வர்த்தகப் பங்களிப்பை வலியுறுத்துகிறது.

✓ 2030, 2037 மற்றும் 2047ஆம் ஆண்டுகளுக்கான தெளிவான மைல்கற்களை அமைப்பதற்கு பல அமைச்சகங்கள், தொழில் அமைப்புகள், கல்வியாளர்கள் மற்றும் நிபுணர்கள் ஒத்துழைக்கின்றனர்.

✓ மதிப்பு கூட்டல், ஏற்றுமதி மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் இந்தியாவை உலகின் முதல் மூன்று வாகன மையங்களில் ஒன்றாக மாற்றுவதே முந்தைய திட்டத்தின் நோக்கமாகும்.

➢ **புதிய சரக்கு போக்குவரத்துச் சட்டம் (New Bills of Lading Law) 2025**

✓ இந்திய நாடாளுமன்றம் சமீபத்தில் சரக்குப் பெட்டக மசோதா, 2025ஐ நிறைவேற்றியது.




✓ இந்தச் சட்டம் 1856ஆம் ஆண்டின் பழைய இந்திய சரக்கு ஏற்றிச் செல்லும் மசோதாவிற்குப் பதிலாகக் கொண்டுவரப்பட்டுள்ளது.

✓ இது கப்பல் ஆவணங்கள் தொடர்பான விதிகளை நவீனமயமாக்குகிறது மற்றும் எளிதாக்குகிறது.

✓ எதிர்கட்சி வெளிநடப்பு செய்த பிறகு, இந்த மசோதா மாநிலங்களவையில் குரல் வாக்கெடுப்பு மூலம் அங்கீகரிக்கப்பட்டது.

- ✓ இந்தச் சட்டம் கப்பல் போக்குவரத்து செயல்முறைகளை மிகவும் திறமையாகவும் சட்டப்பூர்வமாகவும் தெளிவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ✓ சரக்கு போக்குவரத்து மசோதாக்களுக்கான சட்ட கட்டமைப்பை இந்த மசோதா புதுப்பிக்கிறது.

## ➢ தேசிய விளையாட்டு ஆளுகை மசோதா (National Sports Governance Bill), 2025

- ✓ இந்தியாவின் விளையாட்டு நிர்வாகக் கட்டமைப்பை மாற்றியமைப்பதற்காக, தேசிய விளையாட்டு ஆளுகை மசோதா, 2025 ஐ ஒன்றிய அரசு மக்களவையில் அறிமுகப்படுத்தியது.




- ✓ இது 2011 விளையாட்டு விதிகளை சட்டப்பூர்வமாக அமல்படுத்தக்கூடிய, தடகள வீரர்களை மையமாகக் கொண்ட நிர்வாக அமைப்பைக் கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும், பிசிசிஐ போன்ற அமைப்புகளை அதன் வரம்பிற்குள் கொண்டு வருகிறது.
- ✓ தேசிய விளையாட்டு ஆளுகை மசோதா, 2025 என்பது வெளிப்படைத்தன்மை, விளையாட்டு வீரர்களுக்கான சட்டப் பாதுகாப்புகள், தரப்படுத்தப்பட்ட தேர்தல்கள், குறைதீர்க்கும் தீர்வு மற்றும் நிறுவன மேற்பார்வை ஆகியவற்றை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்ட ஒரு முக்கிய சட்டமாகும்.

## ➢ தேசிய கூட்டுறவு கொள்கை (National Cooperation Policy) 2025

- ✓ தேசிய கூட்டுறவு கொள்கை 2025, புது தில்லியில் ஒன்றிய உள்துறை அமைச்சரும் கூட்டுறவுத்துறை அமைச்சருமான திரு அமித் ஷா அவர்களால் கொண்டு வரப்பட்டது.




- ✓ ஒவ்வொரு வட்டத்திலும் ஐந்து மாதிரி கூட்டுறவு கிராமங்களை உருவாக்குவதே இதன் முக்கிய குறிக்கோள்களில் ஒன்றாகும்.
- ✓ கிராமப்புறங்கள், விவசாயிகள், பெண்கள், தலித்துகள் மற்றும் பழங்குடியின சமூகங்களை மேம்படுத்துவதற்கு இந்தக் கொள்கை முக்கியத்துவம் அளிக்கிறது.

APOLLO STUDY CENTRE

- ✓ இது சுற்றுலா, ரைடு-ஹெய்லிங் சேவைகள், காப்பீடு மற்றும் பசுமை எரிசக்தி ஆகியவற்றில் கூட்டுறவுகளை உருவாக்குவதை ஊக்குவிக்கிறது.
- ✓ 2034ஆம் ஆண்டுக்குள் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கூட்டுறவுத் துறையின் பங்களிப்பை மூன்று மடங்காக உயர்த்துவதே இலக்கு ஆகும்.

➢ **சமத்துவத்தில் இந்தியா, ஜி7 நாடுகளை முந்தியுள்ளது**

- ✓ இந்தியா 25.5 என்ற கினி குறியீட்டை அடைந்து, உலகின் 4வது சமத்துவ நாடாக தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது.




- ✓ ஜன்தன் யோஜனா, ஆயுஷ்மான் பாரத், PMGKAY, மற்றும் DBT போன்ற நலத் திட்டங்களால் ஆதரிக்கப்படும் இந்த முன்னேற்றம், 2011 முதல் 171 மில்லியன் மக்களை வறுமையிலிருந்து மீட்டுள்ளது.
- ✓ இருப்பினும், செல்வ ஏற்றத்தாழ்வு, காலாவதியான வறுமைக் கோடுகள் மற்றும் வாய்ப்புகளுக்கான சமமற்ற அணுகல் போன்ற சவால்கள் இன்னமும் உள்ளன.
- ✓ இந்தியாவின் சாதனையானது, உள்ளடங்கிய வளர்ச்சியை நோக்கிய ஒரு முக்கிய படியைக் காட்டுகிறது.

# திட்டங்கள்

- **‘வெற்றி நிச்சயம்’ திட்டம்**
  - ‘வெற்றி நிச்சயம்’ திட்டத்தின் தொடக்க விழா மற்றும் ‘நான் முதல்வன்’ திட்டத்தின் மூன்று ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட விழாவில், மாணவர்கள் இந்தத் திட்டத்தால் பயனடைந்ததை நினைவுகூறக் கேட்டு, தான் மகிழ்ச்சி அடைந்ததாக திரு. ஸ்டாலின் கூறினார்.




  - ‘வெற்றி நிச்சயம்’ திட்டத்தின்மூலம் 18-35 வயதுக்குட்பட்டவர்களில் கல்வியை பாதியில் நிறுத்தியவர்கள் அடையாளம் காணப்பட்டு, பயிற்சி நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் மூலம் சிறப்புப் பயிற்சிகள் வழங்கப்படும்.
  - அவர்களின் பயிற்சிக்கான கட்டணச் செலவுகளை மாநில அரசே ஏற்கும் என்று முதலமைச்சர் கூறினார்.

- **வேலைவாய்ப்புடன் இணைந்த ஊக்கத் தொகைத் திட்டத்திற்கு ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது**
  - புதிதாகப் பதிவு செய்யும் 1 இலட்சத்திற்கும் குறைவான ஊதியம் பெறும் ஊழியர்களுக்கும், குறைந்தபட்சம் 6 மாதங்களுக்கு ஊழியர்களைப் பதிவு செய்து தக்க வைத்துக் கொண்ட முதலாளிகளுக்கும் சலுகைகளை வழங்குவதற்காக, வேலைவாய்ப்புடன் இணைந்த ஊக்கத் தொகை திட்டத்திற்கு ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.




  - இந்தத் திட்டம் ஆகஸ்ட் 2025 முதல் ஜூலை 2027 வரையிலான இரண்டு ஆண்டுகளில் ரூ.99.45 கோடி பட்ஜெட்டில் 3.5 கோடி வேலைவாய்ப்புகளை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
  - புதிய ஊழியர்கள் ஒரு வருடத்திற்கு இரண்டு தவணைகளில் ரூ.15,000 வரை பலன்களைப் பெற முடியும் என்றாலும், முதலாளிகள் இரண்டு ஆண்டுகளுக்கு மாதத்திற்கு ரூ.3,000 சம்பாதிப்பார்கள்.

➤ **கலைஞர் கனவு இல்லம் திட்டம் விரைவில் 1 இலட்சத்தை எட்டும்**

- ✓ ஏழைகளுக்கு கிராமப்புற வீட்டு வசதிக்கான திமுக அரசின் முதன்மைத் திட்டமான கலைஞர் கனவு இல்லம், ஒரு சில வாரங்களில் ஒரு முக்கிய மைல்கல்லை, அதாவது, ஒரு இலட்சம் வீடுகளைக் கட்டி முடிக்கும், மைல்கல்லை அடைய உள்ளது. தற்போது வரை 81,811 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.




- ✓ 18,071 வீடுகளில், குறைந்தபட்சம் கூரை அமைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 118 வீடுகளைப் பொறுத்தவரை, ஜூலை 20ஆம் தேதிக்குள் கட்டுமானத்தை கூரை அமைக்கும் நிலை வரை கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- ✓ 2024-25ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்தத் திட்டத்தின்கீழ், ஆண்டுதோறும் ஒரு இலட்சம் வீடுகளைக் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. 2024-25ஆம் ஆண்டில் ரூ.3,039 கோடிக்கும் அதிகமான தொகை செலவிடப்பட்டுள்ளது.

➤ **தலாஷ் (TALASH)**

- ✓ ஏகலவ்யா மாதிரி குடியிருப்புப் பள்ளி மாணவர்களை ஆதரிப்பதற்காக, யூனிசெப் அமைப்பு இந்தியாவுடன் இணைந்து, பழங்குடியின மாணவர்களுக்கான தேசிய கல்விச்சங்கம் (National Education Society for Tribal Students), தலாஷ் முயற்சியைத் தொடங்கியுள்ளது.



- ✓ TALASH என்பது Tribal Aptitude, Life Skills, and Self-Esteem Hub (பழங்குடியின மக்களின் திறமை, வாழ்க்கைத் திறன்கள் மற்றும் சுயமரியாதை மையம்)-ஐக் குறிக்கிறது. இது பழங்குடியின இளைஞர்களின் ஒட்டுமொத்த வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக வடிவமைக்கபட்டுள்ளது.
- ✓ இந்த முயற்சியானது, EMRSகளில் பதிவு செய்துள்ள 28 மாநிலங்கள் மற்றும் 8 யூனியன் பிரதேசங்களில் உள்ள 1.38 இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு பயனளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

➤ **தமிழ்நாடு முழுவதும் 'உங்களுடன் ஸ்டாலின்' என்ற திட்டத்தை முதலமைச்சர் தொடங்கி வைத்தார்**




- ✓ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், செவ்வாய்க்கிழமை (ஜூலை 15, 2025) சிதம்பரத்தில் மாநிலம் தழுவிய உங்களுடன் ஸ்டாலின் முயற்சியைத் தொடங்கி வைத்து, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் முன்னாள் தலைவர் எல். இளையபெருமாளின் நினைவு மண்டபம் மற்றும் சிலையைத் திறந்து வைத்த பிறகு, ஒடுக்குமுறையைக் குறிக்கும் மற்றும் தீண்டாமையின் அர்த்தத்தைக் கொண்ட, 'காலனி' (தாழ்த்தப்பட்ட வகுப்பினர் வசிக்கும் பகுதி) என்ற வார்த்தையை அதிகாரபூர்வ பதிவகளில் இருந்து அரசு தற்போது நீக்கியுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

## ➢ நிமிர்ந்து நில் முயற்சி

- ✓ உயர்கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவர்களிடையே புதுமை மற்றும் தொழில் முனைவோரை வளர்க்கும்பொருட்டு, உயர்கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவர்களுக்கான ஒரு திட்டமாகிய 'நிமிர்ந்து நில்' திட்டத்தை, குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் அமைச்சர் தா.மோ. அன்பரசன் புதன்கிழமை அன்று தொடங்கி வைத்தார்.
- ✓ இந்த முயற்சியானது ஆண்டுதோறும் 2,000 உயர்கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும், ஐந்து ஆண்டு களில் ரூ.19.57 கோடி செலவில் இது செயல்படுத்தப்படும்.
- ✓ இது 30.5 இலட்சம் மாணவர்களுக்கு தொழில் முனைவு மற்றும் புதுமைகளில் பயிற்சி அளிப்பதை இலக்காகக் கொண்டுள்ளது.

## ➢ பிரதமரின் தன்-தான்ய கிரிஷி யோஜனா (PM Dhan-Dhaanya Krishi Yojana)

- ✓ ஜூலை 16, 2025 அன்று அங்கீகரிக்கப்பட்ட பிரதமரின் தன்-தாண்ய கிரிஷி யோஜனா, 100 குறைந்த செயல்திறன் கொண்ட மாவட்டங்களில் விவசாயத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஆறு ஆண்டு திட்டமாகும். இது ஆண்டுக்கு ரூ.24,000 கோடி பட்ஜெட்டைக் கொண்டுள்ளது.



- ✓ இது பயிர் பல்வகைப்படுத்துதல், நீர்ப்பாசனம், கடன் அணுகல் மற்றும் சேமிப்பு மேம்பாட்டை ஊக்குவிக்கிறது.
- ✓ இந்தத் திட்டம் நிதி ஆயோக்கின் வழிகாட்டுதலுடன் 11 அமைச்சகங்களின் 36 திட்டங்களை ஒன்றிணைத்து, நாடு முழுவதும் 1.7 கோடி விவசாயிகளுக்கு பயனளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### ➢ பிரதமரின் தன்-தான்ய கிரிஷி யோஜனா (PM Dhan- Dhaanya Krishi Yojana)

- ✓ ஒன்றிய அமைச்சரவை 2025 இல் பிரதமரின் தன்-தானிய கிருஷி யோஜனாவுக்கு ஒப்புதல் அளித்தது.




- ✓ இந்தப் புதிய வேளாண் திட்டமானது, 11 அமைச்சகங்களின் 36 திட்டங்களை ஒன்றிணைத்து 100 மாவட்டங்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ✓ இதன்மூலம் ஆண்டு பட்ஜெட் ரூ.24.00 கோடி ஆகும். மேலும், இது 2025-26 நிதியாண்டிலிருந்து தொடங்கி ஆறு ஆண்டுகளுக்குச் செயல்படுத்தப்படும்.
- ✓ தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் விவசாய உற்பத்தித் திறன், நிலைத்தன்மை மற்றும் கடன் கிடைக்கும் தன்மையை மேம்படுத்துதல் ஆகியவற்றில் இந்தத் திட்டம் கவனம் செலுத்துகிறது.

### ➢ வீர் பரிவார் சஹாயத யோஜனா (Veer Parivar Sahayata Yojana)

- ✓ தேசிய சட்ட சேவைகள் ஆணையம் (National Legal Services Authority), பாதுகாப்புப் பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு விரிவான சட்ட உதவியை வழங்குவதற்காக் 'வீர் பரிவார் சஹாயத யோஜனா' என்ற புதிய திட்டத்தைத் தொடங்கியுள்ளது.




- ✓ 'பாதுகாப்புப் பணியாளர்கள் மற்றும் பழங்குடியினருக்கான நீதிக்கான அரசியலமைப்பு பார்வையை மீண்டும் உறுதிப்படுத்துதல்' என்பதே இதன் கருப்பொருள் ஆகும்.
- ✓ நாட்டின் எல்லைகளைப் பாதுகாப்பவர்கள் தங்கள் சட்ட மற்றும் அரசியலமைப்பு உரிமைகளின் முழுப் பாதுகாப்பையும் பெறுவதை உறுதி செய்வதற்கான தேசிய சட்ட சேவைகள் ஆணையத்தின் உறுதிப்பாட்டை இந்த முயற்சி எடுத்துக்காட்டுகிறது.

➢ **2025ஆம் ஆண்டுக்குள் 58 புலிகள் காப்பகங்களுடன் புலிகள் பாதுகாக்கப்படும்**

✓ இந்தியாவில் உள்ள மொத்த புலிகள் காப்பகங்களின் எண்ணிக்கை 2014இல் 46 ஆக இருந்தத, 2025இல் 58 ஆக அதிகரித்துள்ளது என்று ஒன்றிய அமைச்சர் பூபேந்தர் யாதவ் புதுதில்லியில் நடைபெற்ற உலக புலிகள் தின கொண்டாட்டங்களின்போது அறிவித்தார்.




✓ சர்வதேச புலி கூட்டணி மூலம் உலகளாவிய புலி பாதுகாப்பில் இந்தியாவின் தலைமையையும் யாதவ் எடுத்துரைத்தார்.

✓ உலகெங்கிலும் உள்ள ஏழு புலி இனங்களையும் பாதுகாக்க இந்தியாவால் இந்த முயற்சி தொடங்கப்பட்டுள்ளது.

✓ 24 நாடுகள் ஏற்கனவே இந்தக் கூட்டணியில் இணைந்துள்ளன.

APOLLO STUDY CENTRE

# மாநாடுகளும் உச்சி மாநாடுகளும்

➢ **ஆசியான் - இந்தியா கப்பல் பேச்சுவார்த்தை (ASEAN–India Cruise Dialogue)**

✓ இந்தியா, சென்னையில் முதல் ஆசியான் - இந்தியா கப்பல் பயண பேச்சுவார்த்தையை நடத்தியது. கடல்சார் ஒத்துழைப்பை வலுப்படுத்துதல், நிலையான கப்பல் சுற்றுலாவை ஊக்குவித்தல் மற்றும் சாகர்மாலா, ஆக்ட் ஈஸ்ட் பாலிசி மற்றும் விக்சித் பாரத் 2047இன்கீழ் முயற்சிகளை ஒருங்கிணைப்பதற்காக ஆசியான் நாடுகள் மற்றும் திமோர் லெஸ்டேவைச் சேர்ந்த 30க்கும் மேற்பட்ட பிரதிநிதிகளை இந்தியா வரவேற்றது.




✓ கப்பல் பயணிகள் போக்குவரத்தை அதிகரிப்பதையும், கலாச்சார கப்பல் பயண சுற்றுகளை மேம்படுத்துவதையும் இலக்காகக் கொண்ட இந்த முயற்சியானது, பிராந்திய கப்பல் சுற்றுலா மையமாக மாறுவதற்கும், நீலப் பொருளாதாரம் மூலம் அதன் இந்தோ-பசிபிக் கூட்டாண்மைகளை ஆழப்படுத்துவதற்கும் இந்தியாவின் இலட்சியத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

➢ **கட்டுப்பாட்டாளர்கள் மாநாடு (Controllers' Conference) 2025**

✓ ஜூலை 7ஆம் தேதி, புதுதில்லியில் உள்ள பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சித் துறை பவனில் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் இந்த கட்டுப்பாட்டாளர்கள் மாநாடு 2025ஐ தொடங்கி வைத்தார்.




✓ பாதுகாப்பு கணக்குத் துறை நடத்தும் இந்த மூன்று நாள் நிகழ்வு ஜூலை 7 முதல் 9 வரை நடைபெற்றது.

✓ பாதுகாப்பு நிதி நிர்வாகத்தின் எதிர்காலத்தை வடிவமைப்பதற்காக இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் நிதித் தலைமையை ஒன்றிணைப்பதை இந்த மாநாடு நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ இந்த ஆண்டுக்கான கருப்பொருள், 'பாதுகாப்பு நிதி மற்றும் பொருளாதாரம் மூலம் நிதி ஆலோசனை, பணம் செலுத்துதல், தணிக்கை மற்றும் கணக்கியலை மாற்றுதல்' என்பதாகும்.

➢ **பிரிக்ஸ் உச்சி மாநாடு**

✓ ரியோ டி ஜெனிரோவில் நடைபெற்ற 17வது பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி, உலகளாவிய நிர்வாக கட்டமைப்புகளில் விரிவான சீர்திருத்தங்களுக்கு வலுவாக வாதிட்டார். 21ஆம் நூற்றாண்டின் முடிவெடுப்பதில் உலகளாவிய தெற்கை சிறப்பாக பிரதிநிதித்துவப்படுத்துவதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.




✓ வேளாண் உயிர் தொழில்நுட்பம், டிஜிட்டல் கல்வி அணுகல் ஆகியவற்றில் இந்தியாவின் முன்முயற்சிகளை பிரதமர் எடுத்துரைத்தார். மேலும் பிரிக்ஸ் அறிவியல் மற்றும் ஆராய்ச்சிக் களஞ்சியத்திற்கு அழைப்பும் விடுத்தார்.

✓ செயற்கை நுண்ணறிவு குறித்து, பொறுப்பான நிர்வாகத்தை வலியுறுத்திய அவர், அடுத்த ஆண்டு இந்தியா நடத்தும், 'செயற்கை நுண்ணறிவு தாக்க உச்சி மாநாட்டிற்கு' பிரிக்ஸ் கூட்டாளர்களை அழைத்தார்.

➢ **11வது மக்காச்சோள உச்சி மாநாடு: இந்தியாவில் மக்காச்சோள விவசாயத்தை ஊக்குவிப்பதற்காக பெரிய திட்டங்கள்**

